# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1636/16 - 2010 ජනවාරි 15 වැනි සිකුරාදා - 2010.01.15

*1636/16 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்***

*1991 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்*
*தலைவர்,*
*இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை.*

*கொழும்பு,*
*2010, சனவரி 01.*

***2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை***

*1. இப் பணிப்புரை 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள், (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலா மென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. (அ) நிதிக் கம்பனியொன்றினால் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதிக்கு பின்னர் ஆரம்பமாகும் எந்தவொரு காலாண்டுப்பகுதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம் :-*

(i) *அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 4 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும் ;*

(ii) *அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சி காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்*

*விஞ்சக்கூடாது.*

எப்படியிருப்பினும், 2010.01.01 ஆந் திகதியன்று அறுபது (60) வயதினை கடந்த நபர்களிடமிருந்து (இதன் பின்னர் "மூத்த பிரஜைகள்" என குறிப்பிடப்படும்) இந்தப் பந்தியின் (i) அல்லது (ii) இன் கீழ் ஏற்றுக்கொள்ளும் அல்லது புதுப்பிக்கும் தவணை வைப்புக்கள் தொடர்பில், நிதிக் கம்பனி இந்தப் பந்தியின் (i) அல்லது (ii) வட்டிக்கு மேலதிகமாக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை வழங்கலாம்.

(ஆ) நிதிக் கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதிக்கு பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் வைப்புச் சான்றிதழின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய் :-

(i) வைப்புச் சான்றிதழ் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 4 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும் ;

(ii) வைப்புச் சான்றிதழ் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும் விஞ்சாதவகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக்கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3. நிதிக் கம்பனியொன்றினால் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதிக்கு பின்னர் ஆரம்பமாகும் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டிவீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை விஞ்சக்கூடாது.

எப்படியிருப்பினும், மூத்த பிரஜைகளினால் பேணப்படும் சேமிப்பு வைப்புக்கள் தொடர்பில், சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருாவாயினிற்கு மேலதிக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை நிதிக் கம்பனி வழங்கலாம்.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களையும் வைப்புச் சான்றிதழின் கழிவு வீதங்களின் விவரங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இப்பணிபில்,

1. "தவணை வைப்புக்கள்" என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும் ; மற்றும்

2. "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

1- 892/1

---

**1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்**

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்,
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை.

கொழும்பு,
2009, திசெம்பர் 30.

**2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை**

1. இப்பணிப்புரை, 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், ஒவ்வொரு காலாந்தர கூற்றுக்கள் தொடர்பாகவும், கீழே குறித்துரைக்கப்பட்ட திகதியில், மத்திய வங்கியின் நிதியியல் தகவல் முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள படிவங்களுக்கிணங்க பணிப்பாளருக்கு தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

| கூற்று | காலப்பகுதி | வரவேண்டிய திகதி |
|---|---|---|
| என். பீ. டீ. டபிள்யூ. எப். 15 - எல் ஏ (திரவச் சொத்துக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் முதலாவது வேலை நாளன்று |
| என். பீ. டீ. டபிள்யூ. எப். 16 - டீ எல் (வைப்புப் பொறுப்புக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் முதலாவது வேலை நாளன்று |
| என். பீ. டீ. டபிள்யூ. எப். 17 - ஏடீ (முற்பணங்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் முதலாவது வேலை நாளன்று |
| என். பீ. டீ. எம். எப். 1 - பீஎஸ் (ஐந்தொகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாள் |
| என். பீ. டீ. எம். எப் 2 - பீஎஸ் (இலாபம் மற்றும் நட்டம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாள் |
| என். பீ. டீ. எம். எப் 4 - எல்ஏ (திரவச் சொத்துக்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாள் |
| வட்டி வீதம் | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாள் |
| என். பீ. டீ. கியூ 3 - சீஏ (முற்பணங்களின் வகைப்படுத்தல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. டீ. கியூ. எப். 7 - எஸ்எல் (பிணையிடப்பட்ட பெரியளவிலான கடன் நிலுவைகள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. டீ- கியூ. எப்- 07 - யூஎல் (பிணையிடப்படாத பெரியளவிலான கடன் நிலுவைகள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. டீ- கியூ. எப்- 08 - ஏ ஆர் (தொடர்பான தரப்பினருக்கான முற்பணங்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. டீ- கியூ. எப்- 09 - ஐஈ (பங்குகளில் முதலீடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |

| சுற்று | காலப்பகுதி | வரவேண்டிய திகதி |
|---|---|---|
| என். பீ. ட - கியூ. எப் - 10 - ஜீஏ (முதிர்ச்சி இடை வெளிப்பகுப்பாய்வு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 11 - ஐஎஸ் (வட்டி வீத உணர்வுத் தூண்டல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 12 - சீ1 (சீ1) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 12 - சீ 2 (சீ2) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 12 - சீ3 (சீ3) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 12 - சீ4 (சீ4) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ. எப் - 13 - எஸ்சீ (துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| என். பீ. ட - கியூ எப் - 14 - ஐஎஸ் (வட்டி வீத வேறுபாடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் |
| ஐந்தொகை - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| இலாப நட்டக் கணக்கு - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| மூலதனப் போதுமை விகிதம்- கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையினைச் சமர்ப்பிப்பதற்கு சட்டத்தினால் குறித்துரைக்கப் பட்டவாறான இறுதித் திகதி (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த திலிருந்து ஆறு மாதங்களுக்குள்). |

3. 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் பந்திகள் 3 மற்றும் 7, 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர் நேர்வு நிறைவேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரையின் பந்திகள் 4 (i) மற்றும் 4 (ii), 2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள்) பணிப்புரையின் பந்திகள் 5 (i), 5 (ii) மற்றும் 5 (iii) மற்றும் 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையின் பந்தி 4 என்பன இத்தால் நீக்கப்படுகின்றன. சட்டம் மற்றும் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் விதிக்கப்பட்ட மற்றைய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்துமிருக்கும்.

4. எந்தவொரு காலாந்தரக் கூற்றுக்களையும் உரிய திகதியில் சமர்பிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் தொடர்பான நிதிக் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர், சமர்ப்பிக்கவேண்டிய திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு விளக்கமொன்றினை அளித்தல் வேண்டும்.

5. அறிக்கையிடல் காலப்பகுதியுடன் தொடர்பான இரண்டு அல்லது அதற்குப் கூடுதலான கூற்றுக்களை அல்லது தொடர்ந்து இரண்டு காலப்பகுதிக்கான எந்த ஒரு கூற்றுக்களையும் உரிய திகதியில் சமர்ப்பிக்கத்தவறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை, நாணயச் சபைக்கு அறிக்கையிடுவதற்காக, பணிப்பாளருக்கு விளக்கமொன்றினை அளித்தல் வேண்டும்.

6. பொது ஊடகங்களில் நிதிக் கம்பனிகளின் பட்டியல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகையில் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகள் என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகும் அவற்றின் அந்தஸ்திற்கிணங்கவே வகைப்படுத்தப்படும்.

7. பணிப்புரைகள், அத்துடன் அல்லது சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாத நிதிக் கம்பனிகளுக்கு புதிய கிளைகள்/அலுவலகங்களைத் திறப்பதற்கும் புதிய வியாபார சாதனங்கள்/பணிகளை ஏற்படுத்துவதற்குமான ஒப்புதல்கள் வழங்கப்படமாட்டாது.

8. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக-

(அ) "சட்டம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினைக் குறிக்கும் ;

(ஆ) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும் ;

(இ) "மத்திய வங்கி நிதியியல் தகவல் முறை" என்பது நிதியியல் தகவல்களை வழங்குகின்ற நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களுக்காக இதனால் வழங்கப்பட்ட இணையத்தள தகவல் பரிமாற்று முறையாகும் ;

(ஈ) "வாரம்" என்பது, திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பமாகும் ஒரு வார காலப்பகுதியாகும்.

1-892/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.